

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.3.2026) தினத்தந்தி நிறுவனத்தின் அதிபராகத் திகழ்ந்த, இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் முன்னாள் தலைவர் சிவந்தி ஆதித்தனார் அவர்களின் துணைவியார் திருமதி மாலதி அவர்களின் மறைவையொட்டி, அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தினத்தந்தி குழுமத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா.எழிலன் ஆகியோர் உள்ளனர்.

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## தேதி மாற்றம்

### பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் "தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்" 16-03-2026, திங்கட்கிழமை காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் "கலைஞர் அரங்கில்'' நடைபெறும்.**

**அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.**

**பொருள் : 2026 சட்டப்பேரவைத் தேர்தல்**

**"அண்ணா அறிவாலயம்"**

சென்னை - 18, நாள் : 13.3.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்திட "ஜல்ஜீவன் மிஷன்" திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக விடுவித்திடுவீர்!

# ஒகேனக்கல் 3ஆம் கட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு - ஒப்புதலும் நிதியுதவியும் வழங்கிடுவீர்!

## பிரதமருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, மார்ச். 14-**

**தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் நிலையான மற்றும் சம அளவில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்திடவும், ஜல் ஜீவன் மிஷன் திட்டங்களின் நிறைவேற்றத்தை உறுதி செய்திடவும் ஏதுவாக, ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக விடுவிக்கவும், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு (கட்டம்-3) ஒப்புதலையும், நிதியுதவியையும் வழங்கிட வேண்டுமென்றும் கோரி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13-3-2026) கடிதம் எழுதியுள்ளார்.**



அக்கடிதத்தில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் பாதுகாப்பான மற்றும் நம்பகமான குடிநீர் வழங்குவதில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில்உள்ளதுஎனப்பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், கிராமப் பகுதிகளிலுள்ள 1.25 கோடி வீடுகளில், 1.12 கோடி வீடுகளுக்கு செயல்பாட்டில் இருக்கும் குழாய்கள் மூலம் இணைப்புகளை வழங்கி, ஜல் ஜீவன் திட்டத்தில் தமிழ்நாடு பெருத்த முன்னேற்றத்தைச் சாதித்துள்ளதாகவும், இதற்கிடையில் இந்த இயக்கத்தினை மேலும் விரிவாக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள முடிவினை தாம் வரவேற்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜல் ஜீவன் மிஷன் இயக்கத்தின் முதல் கட்டத்தில், தமிழ்நாடு 45 புதிய பல கிராமங்களை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும், 56 பழைய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் மற்றும் 21,258 ஒற்றை கிராமத் திட்டங்களையும் மொத்தமாக 18,123 கோடி ரூபாய் செலவில் எடுத்துள்ளதாகவும், அவற்றில் அனைத்து ஒற்றை கிராம குடிநீர்த் திட்டங்கள், பல கிராமங்களை அடக்கிய 101 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் பழைய குடிநீர்த் திட்டங்களில் புனரமைப்புத் திட்டங்களாக 92 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள தாகவும் மகிழ்ச்சியோடு தனது கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். மீதமுள்ள 9 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நடைமுறையில் முன்னேற்றத்தில் உள்ளன என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள்,

ஆனால், ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் பங்கு என ரூபாய் 5,914 கோடி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், ரூபாய் 3,112 கோடி நிலுவை யில் உள்ளதாகவும், 2024-25 ஆண்டுக்காக தமிழ்நாட்டிற்கு ரூபாய் 2,434 கோடி ஒதுக்கப்பட்ட போதிலும், ரூ.732 கோடி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், 2024 செப்டம்பர் முதல் எந்த நிதியையும் ஒன்றிய அரசிடமிருந்து தமிழ்நாடு அரசு பெறவில்லை என்றும் தனது கடிதத்தில் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர்த் திட்டங்களில் பணிகளின் முன்னேற்றத்தை நிலைநாட்டு வதற்கும், உரிய காலத்தில் இந்தத் திட்டத்தினை நிறைவேற்று வதை உறுதி செய்வதற்கும் தமிழ்நாடு அரசு தனது சொந்த நிதியிலிருந்து 2,550 கோடி ரூபாயை விடுவித்துள்ளதாகத் தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நடைமுறையில் உள்ள ஜல் ஜீவன் மிஷன் திட்டங்களின் நிறைவேற்றத்தை உறுதி செய்திட ஏதுவாக நிலுவைத் தொகையான 3,112 கோடி ரூபாய் நிதியை உடனடியாக விடுவிக்க, தாமதமின்றி இந்தியப் பிரதமர் அவர்கள் தலையிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் ஜப்பான் பன்னாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்ட ஒகேனக்கல் (கட்டம்-3) கூட்டுக் குடிநீர்த் திட்டம் தொடர்பாக இந்தியப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தத் திட்டம் ரூ.8,428 கோடி செலவில் செயல்படுத்திட ஜல் சக்தி அமைச்ச கத்தின் மாநிலத் திட்ட அனுமதி குழுவில் 15.06.2023 அன்று அனுமதிக்கப்பட்டதாகவும், அதில் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் பங்காக ரூ.2,283 கோடி அனுமதிக்கப்பட்டது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட உறுதியின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு இத்திட்டத்தில் முன்னெடுப்புப் பணிகளை தொடங்கியதாகவும், ஆனால் ஒன்றிய குடிநீர் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்புத் துறை, இத்திட்டத் தினை நீட்டிக்க அனுமதி பெறும் வரை, ஒன்றிய அரசின் உதவியை தற்போது வழங்க இயலாது எனக் குறிப்பிட்டுள்ள தாகவும், இந்த முக்கியமான திட்டத்திற்கு இந்தக் கட்டத்தில் ஒன்றிய அரசு தனது ஆதரவிலிருந்து பின்வாங்குவது என்பது, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மக்களுக்குப் போதுமான குடிநீர் வழங்குவதை பாதிக்கும் என வருத்தத்துடன் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிய அரசின் சமீபத்திய ஜல் ஜீவன் திட்டத்தினை விரிவாக்கம் செய்யும் முடிவினைக் கருத்தில் கொண்டு, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு (கட்டம்-3) ஒப்புதலையும், நிதியுதவியையும் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ள அவர், அப்போதுதான் தமிழ்நாடு அரசு ஜப்பான் பன்னாட்டு முகமையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தினை தொடர இயலும் என தனது கடிதத்தில் தெரி வித்துள்ளார். அதோடு, கூடுதலாக 10 புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை சுமார் 7,590 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்திட திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இதில் திண்டுக்கல், நாமக்கல், திருச்சி, கரூர், திருவள்ளூர், புதுக்கோட்டை, மயிலாடு துறை, தென்காசி, தூத்துக்குடி, திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள் உள்ளடக்கியுள்ளதாக வும், இந்தப் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு ஜல் ஜீவன் 2.0 திட்டத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்திட வேண்டுமென்று கோரியுள்ளார்.

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் நிலையான மற்றும் சம அளவில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்திட ஏதுவாக, ஒன்றிய அரசு தனது ஆதரவை தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இவ்விஷயத்தில் இந்தியப் பிரதமர் அவர்களின் ஆதரவினையும், விரைவான தலையீட்டினை யும் எதிர்பார்ப்பதாக தனது கடிதத்தில் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 'தினத்தந்தி' நிறுவனத்தின் முன்னாள் அதிபர்

# சிவந்தி ஆதித்தனார் துணைவியார் திருமதி மாலதி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச், 14-

'தினத்தந்தி' நிறுவனத்தின் முன்னாள் அதிபர் சிவந்தி ஆதித்தனார் அவர்களின் துணைவியார் திருமதி மாலதி அவர்களின் மறைவையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

தினத்தந்தி நிறுவனத்தின் அதிபராகத் திகழ்ந்த, இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் முன்னாள் தலைவர் சிவந்தி ஆதித்தனார் அவர்களின் துணைவியார் திருமதி மாலதி அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

இன்று (13.3.2026) அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினேன்.


அன்னாரை இழந்து தவிக்கும் தினத்தந்தி குழுமத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் அவாகள் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை, ராஜாஜி சாலையில் உள்ள பாரிமுனை பதிவுத்துறை அலுவலக வளாக கூட்டரங்கில் நேற்று (13.03.2026) நடைபெற்ற நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி ஆவண எழுத்தர் நல நிதியம் மூலம் உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறைச் செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத்துறை தலைவர்தினேஷ் பொன்ராஜ் ஆலிவர். ஆவண எழுத்தர் சங்க நிர்வாகிகள் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சரித்திர விசித்திரம்!



**2026** சட்டமன்றப் பொதுத் தேர்தல்
சரித்திரம் காணா
விசித்திரமாக இருக்கப் போகிறது...

முதலிடத்தையும் முதல்வர் இருக்கையையும்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கு
ஒதுக்கி வைத்துவிட்டு

இரண்டு மற்றும் மூன்றாம் இடங்கள் யாருக்கு என்பதைத் தீர்மானிக்கும் திருவிழாவாக

அது இருக்கப் போகிறது..

தி.மு.க. vs அ.தி.மு.க. என்கிற
அரை நூற்றாண்டு கால தேர்தல் வரலாற்றை
தி.மு.க. vs என்.டி.ஏ. என திருத்தி எழுதப் பார்க்கும் காவிக் கம்பெனி

அதற்காக
2026 களத்தை
சென்னை சூப்பர் கிங்ஸ்க்கும்
டெல்லி டேர் டெவிலுக்குமான போட்டியாக
கட்டியமைத்து
வருகிறது..

இதற்காகவே
எடப்பாடியை ஓரங்கட்டி விட்டு
அமித்ஷாவும் பியூஷ் கோயலுமே
கூட்டணி விவகாரங்களைக் கையாண்டு வருகின்றனர்..

அவசியப்படும் போது மட்டும்
எடப்பாடியை டெல்லிக்கு வரவழைத்து
உத்தரவு போடும் எஜமானராக அமித்ஷா இருக்கிறார்...


ஆனாலும்

தங்களை ஆட்சி செய்வதற்கு
ஒரு அடிமையை தமிழக மக்கள்
தேர்வு செய்ய மாட்டார்கள் என்பது தெரிந்தும்
பா.ஜ.க. இப்படி அத்துமீறல் அரசியலை நடத்துவதற்கு
ஒரே காரணம்
அ.தி.மு.க.வை மூன்றாம் இடத்துக்குத் தள்ளி விட்டு
இரண்டாம் இடத்தை பா.ஜ.க.வுக்கு துண்டு விரிக்கவே...!

**குறிப்பு :**

**எந்தக் கூட்டத்திலும் "அ.தி.மு.க. - எடப்பாடி" என்னும் பெயர்களை மோடி மருந்துக்கும் மறந்தும் கூட உச்சரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது...**

**என்ன நாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்